# சிரஸ்மரணீயர் - முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர்

சோகத்தூர் ராமானுஜ தாஸன்

ஸ்ரீமத்வேதமார்கேத்யாதி விஶேஷணவிஶிஷ்டரான முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கரின் அரும்பெருமைகளைத் தொகுத்து ஒரு உயர்ந்த மலராக ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ரத்தின் போது ஸமர்ப்பிக்க எண்ணி, அதில் அடியேனுக்கும் ஒரு சிறு பங்கு அளித்துள்ள ஸ்ரீ.உ.வே. சடகோபன் ஐயங்கார் ஸ்வாமியின் நியமனத்தை சிரமேற்கொண்டு இச்சிறு முன்னுரையை எழுதி க்ருதார்த்தனாக விழைகிறேன்.

## நாவீறு படைத்தவர்

'अध्यासीनतुरङ्गवक्त्रविलसज्जिह्वाग्रसिंहासनात् आचार्यादिह देवतां समधिकामन्यां न मन्यामहे' என்கிற படியே ப்ரத்யக்ஷதைவமான, நாவில் ஸ்ரீஹயக்ரீவன் நிலைத்திட, நம் அழகிய சிங்கர் 'जितकर्णश्च दानाद्यः जितरामश्च भाषणात्' என்னும்படி கொடையிலும் பேச்சாற்றலிலும் கர்ணனையும் சக்ரவர்த்தித்-திருமகனையும் தோற்கடித்தவராய் நிகரற்றவராகத் திகழ்ந்தார். பல எதிராளிகளை, (நாஸ்திகர்களைக் கூட), அசத்தும் ஸமயோசித புத்திக் கூர்மையால் எல்லோருக்கும் நன்மை பயந்தவர். உபதேஶத்தால் தர்மஶ்ரத்தை, பகவத்பக்தி, ப்ரபத்தி முதலியன பலருக்கு உண்டாக்கி உய்வித்தவர்.

உபந்யாஸங்களாலும், அருள்மொழிகளாலும், தான் இயற்றிய பல க்ரந்தங்களாலும் தெளிவாக, எளிதாக வேதாந்தக்கருத்துக்களைத் தெரிவிப்பதில் மிகவும் வல்லவர். மாலோல வித்வத் ஸதஸ்ஸில் மஹாவித்வான்களையும் மடக்கும், அதே ஸமயத்தில் கற்றுக்குட்டிகளையும் நன்கு ஊக்குவிக்கும், திறன் பெருவியப்பை ஏற்படுத்தும். புதிதுபுதிதாகப் பல ஆழ்ந்த வேதாந்த விஷயங்களை மனங்கவரும் வகையில் கேள்விகளின் வாயிலாக தெளிவிப்பதில் நிபுணர்.

## பயனுள்ள வாழ்வு

பொதுவாகவே 'अधीतमध्यापितमार्जितं यशः' என வாழ்க்கையின் குறிக்கோள்களாக வேதமோதுதல், ஓதுவித்தல், புகழ் அடைதல் இவை கருதப்படுகின்றன.

மஹர்ஷிகளும் 'येषां त्रीण्यपदानानि योनिर्विद्या च कर्म च', 'अभिजनविद्यासमुदेतं समाहितं संस्कर्तारमीप्सेत्' என்று ஆசார்யர்கள் உயர்குடிப்பிறப்பு, கல்வி மற்றும் அனுஷ்டானம் ஆகிய மூவகையான பெருமை பெற்றவராயின் நலம் எனக் கூறியுள்ளனர்.

ஆக ஆசார்யர்கள் விஷயத்தில் ஸ்வாமி ஸ்ரீதேஶிகன் ஸாதித்த 'सिद्धं सत्सम्प्रदाये स्थिरधियमनघं श्रोत्रियं ब्रह्मनिष्ठं....', 'त्रय्यन्तप्रतिनन्दनीयविवधोदन्ताः' என போற்றத்தக்க ஸம்ப்ரதாயஜ்ஞானம், ஆணித்தரமான இறைநம்பிக்கை, தத்த்வம், நடைமுறை அனுஷ்டானங்களில் வரும் ஐயங்களையும் கலக்கங்களையும் களைதல், அவற்றில் எடுத்துக்காட்டாகத் திகழ்தல் முதலிய நற்பண்புகள் பொருந்தியவர்.

## மறைகள், மறையோர் போற்றும் மஹான்

ஸ்ரீமதழகியசிங்கரின் ஶதாபிஷேகத்தில் மஹாவித்வான் காஞ்சீபுரம் ஸ்ரீ.உ.வே. அண்ணங்கராசார்யர் 'हस्तोदितः कोऽपि पुमान् करीशः हस्तोदितोऽन्यो रमणीयसिंहः । सिंहोपरिष्टात् प्रथमो निविष्टः सिंहाङ्घ्रिपार्श्वे तु परो विचित्रम् ॥' 'ஹஸ்தத்தில் அவதரித்த தேவாதிராஜனும், நம் அழகியசிங்கரும் ந்ருஸிம்ஹனுடன் நெருங்கிய ஸம்பந்தம் உள்ளவர்கள். பேரருளாளன் ந்ருஸிம்ஹனின் மேலும், நம் அழகியசிங்கர் மாலோலனின் திருவடிவாரத்திலும் உளர்' எனப் புகழ்ந்தார்.

வேதங்களும் 'हस्त एवास्य हस्तः', 'இவர் கையல்லவா கை?', என்பதால் இவ்விருவரின் கொடையை

*வர்ணித்தன. அழகியசிங்கரும் காஞ்சீபுரம் அஹோபிலமடத்தின் முத்ரைகர்த்தாவாக பல ஆண்டுகள் கைங்கர்யம் செய்தவர்.* 'वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः सन्न्यासयोगाद्यतयः शुद्धसत्वाः' *இடைவிடாது வேதாந்தங்களின் ஆழ்ந்த சிந்தனையால் அவற்றின் உட்கருத்துக்களை நன்கு தீர்மானிப்பவர்கள், அப்படிப்பட்ட ஸந்ந்யாஸ யோகத்தினால் தோஷமற்றவர், அப்ராக்ருதர், என்று கொண்டாடுகின்றன.*

*வேதவித்துக்களான மஹர்ஷிகளும்* 'अष्टावात्मगुणाः दया सर्वभूतेषु क्षान्तिरनसूया शौचमनायासो मङ्गलमकार्पण्यमस्पृहा इति' *என ஆத்மகுணங்களையும்,* 'सत्यं दमस्तपः शौचं संतोषो ह्रीः क्षमार्जवम् । ज्ञानं शमो दया ध्यानमेष धर्मः सनातनः' *என தர்மலக்ஷணங்களையும், கூறி அவைகளால் விளங்குபவர் லோகோபகாரகர் என்றனர்.* 'उपमानमशेषाणां साधूनां यः सदाऽभवत्', 'न चलति निजवर्णधर्मतो यः सममतिरात्मसुहृद्विपक्षपक्षे .... सितमनसं तमवेहि विष्णुभक्तम्', *என ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப் போன்ற நிஶ்சலமான பக்தி, கள்ளங்கபடமற்ற தன்மை, தான், நண்பர், எதிரிகள் என எல்லோரிடத்திலும் உயர்வு, தாழ்வு பாராத ஸமத்துவம் குடிகொண்டவர்.*

### நன்மை பயப்பவர்

'नहि कल्याणकृत् कश्चित् दुर्गतिं तात गच्छति', *என்ற கீதாசார்யன் சொற்படி நன்மையே முக்கரணங்களாலும் எப்பொழுதும் செய்த 'கல்யாணக்ருத்'. பலருக்கு (அடியேன் உட்பட) கல்யாணங்களை நன்கு நடத்தி நல்வாழ்வுக்குக் காரணமானவர் கூட. உத்தரக்ருத்யங்களாகச் சொன்ன* 'अध्यात्मग्रन्थनिर्माणमनेकेषां च बोधनम् । अर्चावतारसेवा च' *என்றபடி வேதாந்த க்ரந்தங்களை இயற்றுதல், பலருக்குக் காலக்ஷேபாதிகளான உபதேஶங்கள் செய்தல், அர்ச்சையில் எம்பெருமானுக்குத் தொண்டு செய்தல் - ஸ்ரீமதஹோபிலம், திருஆதனூர், திருபுள்ளம்பூதங்குடி, திருவுள்ளூர், ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் முதலியன.*

### கடனற்றவர்

*வேதங்களில்* 'जायमानो वै ब्राह्मणः त्रिभिरृणवा जायते ब्रह्मचर्येण ऋषिभ्यो यज्ञेन देवेभ्यः प्रजया पितृभ्य एष वा अनृणो यः पुत्री यज्वा ब्रह्मचारिवासी', 'अनृणा अस्मिन्ननृणाः परस्मिँस्तृतीये लोके अनृणाः स्याम' *அந்தணன் பிறக்கும்பொழுதே ரிஷிகளுக்கு, தேவர்களுக்கு மற்றும் பித்ருக்களுக்குக் (மூன்று பேருக்கு) கடனாளியாகப் பிறக்கிறான் எனவும் அவன் எப்பொழுதும் மூவுலகிலும் கடனாளியாக இராமலிருப்பதற்காக யாகங்களால் தேவக்கடனிலிருந்தும், வேதஅத்யயனத்தினால் ரிஷிக்கடனிலிருந்தும் நன்மக்களைப் பெற்று பித்ருக்கடனிலிருந்தும் விடுபடுவான் எனக் கூறியுள்ளது.*

*'விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவும் அடிமையெல்லாம்*
*மண்ணுலகத்தில் மகிழ்ந்தடைகின்றனர், வண்டுவரைக்*
*கண்ணனடைக்கலம் கொள்ளக் கடன்கள் கழற்றிய, நம்*
*பண்ணமரும் தமிழ்வேதமறிந்த பகவர்களே'*

*என ஸ்வாமி ஸ்ரீதேஶிகனும் நாலாயிர திவ்யப்ரபந்த அதிகாரிகளைக் கொண்டாடுமிடத்து அவர்கள் கடன்களைக் கழற்றியவர் என்று ஸாதித்துள்ளார்.*

*அதிலும் குறிப்பாக,* 'देवर्षिभूतात्मनृणां पितॄणां न किङ्करो नायमृणी च राजन् । सर्वात्मना यः शरणं शरण्यं नारायणं लोकगुरुं प्रपन्नः ॥' *என்று ப்ரபன்னன் எவ்விதக் கடன்களாலும் பாதிக்கப் படுவதில்லை எனவும் அருளிச்செய்துள்ளார்.*

### நிகமனம்

*இவ்வாறான பல அரும்பெருமைகளுக்கெல்லாம் ஒரே இருப்பிடமாகத் திகழ்ந்தவர் முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் என்பதால் நாமெல்லாரும் மிக்க பெருமையுடனும் பக்தி ஶ்ரத்தைகளுடனும் அவரை நினைவிற் கொண்டு, அன்னார் உகந்த கைங்கர்யங்களில் ஈடுபட்டு உய்வதே விரும்பத் தக்கது.*

*ஆதலால் ஶ்ரீமதாதிவண்ஶடகோப மஹாதேஶிகன் அழகியசிங்கனிடம்* 'यत्कटाक्षेण सर्वेऽपि यत्स्थानागतयोगिनः । श्रीनृसिंहदयापूर्णाः तन्मुनेर्मङ्गळं सदा ॥' *என்னும்படி ஶ்ரீமதஹோபிலமட ஆஸ்தானத்தில் வீற்றிருக்கும் எல்லா அழகியசிங்கர்களும் ஶ்ரீமாலோல ந்ருஸிம்ஹனுடைய தயைக்கு முழு இலக்காவர் என ஆஶாஸித்ததும்,* 'यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम्' *என்று உபநிஷத்துகளில்* '*வரிக்கின்றனன் பரன் யாவரை என்று மறையதனில்*' *என ஸ்வாமி ஶ்ரீதேஶிகனும் ஸாதித்தபடி எழுந்தருளியிருந்த மஹாமஹிமரான ஶ்ரீமதழகியசிங்கரைத் தஞ்சம் புக்கு அமைகிறேன்.*